லக்கம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.எம்.எஸ்.சண்முகம் எம்.எஸ்.சி.,

நி.மு.எண்.166/ 2023

நாள்:03.11.2023.

பொருள்: மனைப்பிரிவு – ஈரோடு மாவட்டம் –லக்கம்பட்டி பேரூராட்சி – நல்லகவுண்டன்பாளையம் – செய்யாம்பாளையம் கிராமம் – சர்வே எண். 111/4பி–ல் 3120.00 சமீ காலியிடத்தை தற்போதைய உட்பிரிவின் படி புதிய சர்வே எண்.111/4B, 4B1,4B10, 4B11, 4B12, 4B13, 4B14, 4B2, 4B3, 4B4, 4B5, 4B6, 4B7, 4B8, 4B9 என்றும் உட்பிரிவு செய்யப்பட்ட 13 மனையிடங்களாகப் பிரித்து விற்பனை செய்ய மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க கோரியது – தொழில்நுட்ப ஒப்புதல் படி " ஸ்ரீ ராஜ கணபதி நகர்" மனைப்பிரிவுக்கு பேரூராட்சி ஒப்புதல் வழங்கி – உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1) எம்.பி.மோகனகந்தரம்–1 எம்.சிவகாமி–2, 4/682, பாலமுருகன் நகர், குள்ளம்பாளையம் பிரிவு, கோபி–638476 அவர்களின் விண்ணப்பம் நாள்: 25.09.2023.
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களின் ந.க.எண். ERD/MNP9B7YU/2023/TCP, நாள்.27.06.2023
3) இவ்வலுவலக ந.க.எண்.166/2023, நாள்.10.07.2023.
4) மாநில பாரத வங்கி செலுத்துசீட்டு எண்.20230922031073 நாள்22.09.2023.
5) இப்பேரூராட்சி செலுத்துசீட்டு எண்.843,844,845/2023–24, நாள்.25.09.2023 மற்றும் 1007/2023–24 நாள்.30.10.2023
6) இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 133 /2023, நாள்.31.10.2023.
7) தொடர்புடைய ஆவணங்கள்.

உத்திரவு:–

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம் லக்கம்பட்டி பேரூராட்சி, நல்லகவுண்டன்பாளையம், செய்யாம்பாளையம் கிராமம் சர்வே எண். 111/4பி–ல் 3120.00 சமீ காலியிடத்தை 13 மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்ய தற்போதைய உட்பிரிவின் படி புதிய சர்வே எண்.111/4B, 4B1,4B10, 4B11, 4B12, 4B13, 4B14, 4B2, 4B3, 4B4, 4B5, 4B6, 4B7, 4B8, 4B9 என்றும் உட்பிரிவு செய்யப்பட்ட மனைப்பிரிவு பார்வை 2ல் காணும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களால் மனைப்பிரிவு தொழில்நுட்ப (SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.264/2023) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கோபிசெட்டிபாளையம் இணை 1 சார்பதிவாளர் ஆவண எண்.1844/2023 நாள்.30.05.2023ன்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்தினை இப்பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவுக்கு பேரூராட்சியின் அங்கீகாரம் வேண்டி பார்வை 1–ல் காணும் விண்ணப்பத்தில் எம்.பி.மோகனகந்தரம்–1 எம்.சிவகாமி–2 4/682, பாலமுருகன் நகர், குள்ளம்பாளையம் பிரிவு, கோபி–638476 என்பவர்களால் விண்ணப்பிக்கப்பட்டது.

எனவே, பார்வை 2–ன்படி வழங்கப்பட்ட மனைப்பிரிவு தொழின்நுட்ப ஒப்புதல் படியும், பார்வை 6–ல் காணும் லக்கம்பட்டி பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு " ஸ்ரீ ராஜ கணபதி நகர்" மனைப்பிரிவுக்கான பேரூராட்சி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களின் ந.க.எண். ERD/MNP9B7YU/2023/TCP, நாள்.27.06.2023–ன் படி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழின்நுட்ப ஒப்புதல் SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.264/2023–ன் உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

2) பேரூராட்சி மற்றும் அரசு இதர துறைகளுக்குச் சொந்தமான எந்த ஒரு இடமும் இந்த மனைப்பிரிவில் சேர்க்கக்கூடாது.

3) செயல் அலுவலரால் அவ்வப்போது கூறப்படும் அறிவுரைகளின்படி உரிமையாளர்கள் செயல்பட வேண்டும்.

4) தற்போது செலுத்தப்பட்ட தொகைகள் குறைவு எனத் தெரிய வந்தாலோ அல்லது தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டாலோ, வித்தியாசத் தொகையினை உடன் செலுத்தப்படல் வேண்டும்.

5) இந்த மனைப்பிரிவில் எந்த ஒரு மாறுதல்கள் செய்யப்பட்டாலோ, மனைகள் உட்பிரிவாக பிரிக்கப்பட்டாலோ, சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் முறையாக அனுமதி பெறப்படல் வேண்டும்.

6) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு துறையின் அனைத்து நிபந்தனைகளும் பொருந்துவதாகும். நிபந்தனைகள் மீறி மனையிடங்கள் விற்பனை செய்யப்பட்டால் இந்த உத்தரவு இரத்து செய்யப்படும்.

7) மனையிடம் தொடர்பாக வில்லங்கங்கள் ஏற்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.

8) மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் லக்கம்பட்டி பேரூராட்சி மன்றத்தீர்மான எண்.133/2023. நாள்.31.10.2023 மற்றும் இவ்வலுவலக ந.க.எண்.166/2023, நாள். 03.11.2023 ஆகியவை தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்ய வேண்டும்.

9) மனைப்பிரிவு அங்கீகாரம் தொடர்பான பிற நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

10) அரசு மூலம் பாதை விஸ்தரிப்பு மற்றும் பொது காரியங்களுக்காக அங்கீகாரம் செய்யப்பட்ட இடத்தை அரசு துறை மூலம் எடுக்கும் நிலையில் இப்பேரூராட்சியை கட்டுப்படுத்தாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:– மனைப்பிரிவு வரைபடம் – 1.

செயல் அலுவலர்,
லக்கம்பட்டி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

பெறுநர்:–

எம்.பி.மோனசுந்தரம்–1 எம்.சிவகாமி–2, 4/682, பாலமுருகன் நகர், குள்ளம்பாளையம் பிரிவு, கோபி–638476

நகல்:–

1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு
2) 1. இணை சார்பதிவாளர் கோபிசெட்டிபாளையம் அவர்களின் தகவலுக்காக
3) உரிய கோப்புக்கு.

லக்கம்பட்டி பேரூராட்சி அலுவலகம்
சாதாரணக்கூட்ட நடவடிக்கைகளின் நகல்

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு லக்கம்பட்டி பேரூராட்சி மன்றத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகளின் நகல்.

தலைமை: திருமதி.கூ.அன்னக்கொடி, தலைவர், லக்கம்பட்டி பேரூராட்சி.

பொருள் –07	தீர்மான எண்.133/2023 நாள்.31.10.2023.
லக்கம்பட்டி பேரூரட்சிக்குட்பட்ட நல்லகவுண்டன்பாளையம் செய்யாம்பாளையம் கிராமம் க.ச.எண்.111/4பி –இல் 3120 சமீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிக்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.ERD/MNP9B7YU/2023TCPநாள்.27.06.2023 ன் படி தொழில்நுட்ப அங்கீகாரம் (SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.264/2023) வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்தினை கோபிசெட்டிபாளையம் இணை 1 சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1844/2023 நாள்.30.05.2023ன் படி தானசாசனம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றி அடிப்படை வசதிகள் தார் சாலை, வடிகால், தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவு உரிமையாளர் திருமதி.எம்.சிவகாமி–1 திரு.எம்.பி.மோகனசுந்தரம்–2 என்பவர்களால் பேரூராட்சி இறுதி ஒப்புதல் வழங்குமாறு கோரியுள்ளனர். எனவே, மனைப்பிரிவு தொழில்நுட்ப நிபந்தனைகளின் படி பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் பேரூராட்சி மன்ற இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அங்கீகாரத்திற்கு.	அங்கீகரிக்கப்பட்டது (ஒம்) திருமதி கூ.அன்னக்கொடி, தலைவர், லக்கம்பட்டி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

(உண்மை நகல்)

செயல் அலுவலர்,
லக்கம்பட்டி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திருமதி.T.சசிகலா, M.B.A,M.Phil, P.G.D.C.A.,,

ந.க.எண். 1206/2023/எப் 1 நாள். 02.01.2024

பொருள்: மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – லக்கம்பட்டி கிராமம், வார்டு–A, பிளாக் – 10. T.S.No. – 1/10, 1/12 (Old SF No.205/2) இல் – 5718 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்குSWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.264/2023 என எண்ணிடப்பபட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது

பார்வை:
1. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணைய வழி உத்தரவு ந.க.எண்.ERD/MNP9B7YU/2023/2022TCP நாள்.11.05.2023
3. தானப்பத்திர ஆவண எண்.1845/2023 மற்றும் 1846/2023 நாள்.30.05.2023
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.14.06.2023
5. 16.06.2023 ஆம் நாளிட்ட திரு.எம்.பி.மோகனசுந்தரம் அவர்களின் விண்ணப்பம்
6. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு உத்தரவு எண்.2023/0153/10/002066TR நாள்.22.06.2023
7. 09.08.2023 ஆம் நாளிட்ட திரு.எம்.பி.மோகனசுந்தரம் மற்றும் எம்.பி.சரண்குமார் ஆகியோர் விண்ணப்பம்
8. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணைய வழி உத்தரவு ந.க.எண்.ERD/MNP9B7YU/2023/2022TCP நாள்.27.06.2023
9. நகர்மன்ற தீர்மானம் எண். 619 நாள். 30.08.2023
10. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.08.09.2023
11. தானப்பத்திர ஆவண எண்.3363/2023, நாள்.27.09.2023
12. 09.10.2023 ஆம் நாளிட்ட திரு.எம்.பி.மோகனசுந்தரம் அவர்களின் விண்ணப்பம்
13. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு பட்டா மாறுதல் உத்தரவு எண்.2023/10/31/000413SD நாள்.19.09.2023 மற்றும் 2023/10/31/000419SD நாள்.20.09.2023
14. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.17.10.2023
15. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு உத்தரவு எண்.2023/10/31/000440SD நாள்.12.10.2023
16. அரசு பொறியியல் கல்லூரி (IRTT) அறிக்கை எண்.IRTT/CE35/2023?24/Test No.34/801 நாள்.23.11.2023
17. நகர்மன்ற தீர்மானம் எண். 738 நாள். 29.12.2023

****

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், வார்டு–A, பிளாக் – 10. T.S.No. – 1/10, 1/12 (Old SF No.205/2) இல் – 5718 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2 இல் காணும் உத்தரவில் சாலை வரைபட ஒப்புதல் அளித்து உத்திரவிடப்பட்டும் இதன் பின்னர் SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.264/2023 என எண்ணிடப்பட்டு பார்வை 8 இல் கண்டவாறு தொழில்நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

106

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் பொது ஒதுக்கீடுகளை பார்வை 3 மற்றும் 11 இல் கண்டவாறு நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்களை தனித்தனியாக உட்பிரிவு செய்து பார்வை 13 இல் கண்டவாறு வட்டாட்சியரின் உத்தரவு வரப்பெற்றது. மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவின்படியும், பொறியர் பிரிவின் 28.11.2023, மற்றும் 05.12.2023 ஆம் நாளிட்ட குறிப்புகளின் பேரிலும் பார்வை 17 இல் காணும் தீர்மானத்தில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின்படியும், பொறியியர் பிரிவின் குறிப்புகளின் அடிப்படையிலும், பார்வை 17 இல் காணும் நகர்மன்றத்தீர்மான ஒப்புதலின் பேரிலும் வார்டு-A, பிளாக் - 10. T.S.No. - 1/10, 1/12 (Old SF No.205/2) இல் - 5718 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.264/2023 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

இம்மனைப்பிரிவில் வடிகால், கழிவு நீர் செல்வது தொடர்பாக பொது பிரச்சனை ஏற்படும் போதும மனைப்பிரிவு உரிமையாளரே சொந்த பொறுப்பில் தீர்வு செய்ய வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

இணைப்பு

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.264/2023 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.

பெறுநர்
திரு.எம்.பி.மோகனசுந்தரம் மற்றும் ஒருவர்,
44/682, ஸ்ரீ பாலமுருகன் நகர்,
குள்ளம்பாளையம் பிரிவு,
கோபிசெட்டிபாளையம்.

நகல்

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு.
2. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.
3. 1ம் எண் இணை சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம்
4. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்.
5. நகராட்சி பொறியாளர்
6. வருவாய் ஆய்வாளர் (காலியிட வரி நிர்ணயம் செய்ய)